# முசிறி நகராட்சி

**2022-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் (11.04.2022) 11-ஆம் தேதி திங்கட் கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் | தீர்மானம் |
|---|---|---|
| 11.04.2022 | **<u>பொருள் - 1</u>**<br>அரசாணை எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.03.2022 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> :<br>பதிவு செய்யலாம் (ந.க.எண்.579/2022/அ) | தீர்மானம் எண்.25 பதிவு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| 11.04.2022 | **<u>பொருள் - 2</u>**<br>அரசாணை எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர் நாள்.01.04.2022–ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி 01.04.2022 முதல் சொத்துவரி சீராய்வு பணிகள் மேற்கொள்வதற்கு நாளிதழ் விளம்பர செலவினம் மற்றும் பதிவேடுகள், படிவங்கள் அச்சடித்து கொள்வதற்கு உண்டான உத்தேச செலவினம் ரூ.2.00 (இரண்டு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> :<br>அனுமதிக்கலாம் (ந.க.எண்.579/2022/அ) | தீர்மானம் எண்.26 பதிவு செய்யப்பட்டது |
| 11.04.2022 | **<u>பொருள் - 3</u>**<br>தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.<br>15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.<br>அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு | தீர்மானம் எண்.27 பதிவு செய்யப்பட்டது |

மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>சொத்துவரி:</u>

குடியிருப்பு கட்டடங்கள்(**Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(**Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100%

சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டிடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**<u>காலிமனை வரி சீராய்வு:</u>**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:</u>**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டடுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் **முசிறி** நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | – |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் ( நகர் ஊரமைப்பு (IUDP) துறைக்கு ரூ.59.19 இலட்சம் மற்றும் புதிய பேருந்து நிலையம் பயன்படுத்துவதற்காக கண்ணிமார் கோவில் இடத்திற்கு வாடகை கட்டணம் ரூ.6.00 ஆக மொத்தம் ரூ.65.19/– இலட்சம்) | 0.65 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | 0.81 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | **0.15** |
| | **மொத்தம்** | **1.61** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1,

நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், **முசிறி** நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலா

மேலும் தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றிற்கு ஏற்கனவே உள்ள மண்டலங்களில் இணைத்து கீழ்கண்டவாறு மண்டலங்கள் நிர்ணயம் செய்யலாம்.

| அ – மண்டலம் | | | |
|---|---|---|---|
| வ. எண் | வார்டு எண் | தெரு பெயர் | மண்டலம் |
| 1 | 2 | தா.பேட்டை ரோடு மேற்கு (சடையப்பன் நகர்,வேதாத்திரி நகர்) | அ |
| 2 | 2 | குமரன் நகர் | அ |
| 3 | 2 | சாந்தா நகர், விசாலட்சி நகர், இமானுவேல் நகர் | அ |
| 4 | 2 | தில்லை நகர் | அ |
| 5 | 2 | ரேணுகாதேவி நகர் | அ |
| 6 | 2 | உடையார் தோட்டம் விஸ்தரிப்பு | அ |
| 7 | 2 | சிவசங்கரி நகர் | அ |
| 8 | 2 | முத்து நகர் | அ |
| 9 | 3 | கந்தசாமி நகர் | அ |
| 10 | 3 | சோழன் நகர் | அ |
| 11 | 3 | கணபதி நகர் | அ |
| 12 | 3 | பாரிவள்ளல் நகர் | அ |
| 13 | 3 | சிவகாமி நகர் | அ |
| 14 | 3 | அந்தரப்பட்டி, அந்தரப்பட்டி ரோடு | அ |
| 15 | 3 | அரவிந்த் நகர் | அ |
| 16 | 3 | கோலாட்சி முருகன் நகர் | அ |
| 17 | 4 | காவேரி நகர் | அ |
| 18 | 4 | பாரதமாதா தெரு | அ |
| 19 | 4 | ராஜாஜி நகர் | அ |
| 20 | 4 | செல்வ விநாயகா நகர் | அ |
| 21 | 5 | மூக்கன் ஆசாரி தெரு , பைபாஸ் ரோடு | அ |
| 22 | 5 | அபிராமி தெரு | அ |
| 23 | 5 | ஏர்வாடி தெரு | அ |
| 24 | 5 | கற்பக விநாயகர் தெரு(1 முதல் 9) | அ |
| 25 | 5 | புதிய பேருந்துநிலைய எதிர்புறம், பைபாஸ் ரோடு | அ |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 26 | 6 | அழகாப்பட்டி ரோடு ( சீனிவாசன் வீடு முதல் பைபாஸ் வரை) | அ | | |
| | | 27 | 6 | வாரியர் தெரு | அ | | |
| | | 28 | 6 | துறையூர் ரோடு மேல்புறம், எம்.பி.என். தோட்டம், அம்மையப்ப நகர் | அ | | |
| | | 29 | 6 | கார்த்திக் பள்ளி முதல் திருமுருகன் நகர் பேருந்து நிறுத்தம் | அ | | |
| | | 30 | 7 | எம்.பி.என். 1வது தெரு முதல் 4வது தெரு | அ | | |
| | | 31 | 7 | சந்திரா நகர் | அ | | |
| | | 32 | 7 | துறையூர் ரோடு கீழ்புறம் | அ | | |
| | | 33 | 7 | பாலகுமரன் தெரு | அ | | |
| | | 34 | 7 | பாலாஜி நகர் | அ | | |
| | | 35 | 8 | கலிங்கா நகர் | அ | | |
| | | 36 | 8 | அன்னை நகர் | அ | | |
| | | 37 | 8 | நடராஜ நகர் விஸ்தரிப்பு ( சக்தி நகர்) | அ | | |
| | | 38 | 8 | காமாட்சி நகர் (துறையூர் ரோடு) | அ | | |
| | | 39 | 10 | ராஜகோபால் தெரு | அ | | |
| | | 40 | 10 | திருமூலர் தெரு | அ | | |
| | | 41 | 10 | கண்ணதாசன் தெரு (பைபாஸ் ரோடு தெற்கு) | அ | | |
| | | 42 | 10 | வீட்டுவசதி வாரிய குடியிருப்பு | அ | | |
| | | 43 | 10 | தென்றல் நகர் | அ | | |
| | | 44 | 11 | பரணி பேக்கரி முதல் சந்தபாளையம் வரை | அ | | |
| | | 45 | 11 | வீட்டுவசதி வாரிய குடியிருப்பு | அ | | |
| | | 46 | 11 | பொன் நகர் | அ | | |
| | | 47 | 12 | சிங்காரசோலை | அ | | |
| | | 48 | 13 | அழகாப்பட்டி ரோடு பிள்ளையார் கோவில் முதல் கருணாகரன் வீடு வரை | அ | | |
| | | 49 | 14 | காந்திநகர் பிரதான சாலை | அ | | |
| | | 50 | 14 | வேளக்காநத்தம் ரோடு | அ | | |
| | | 51 | 14 | விசாலாட்சி நகர் | அ | | |
| | | 52 | 16 | தா.பேட்டை ரோடு கிழக்கு (தேவாஸ் டைலர்ஸ் சந்து) | அ | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 53 | 16 | பார்வதிபுரம் 1வது தெரு | அ | | |
| | | 54 | 16 | பார்வதிபுரம் 2வது தெரு | அ | | |
| | | 55 | 16 | துறையூர் ரோடு | அ | | |
| | | 56 | 18 | சேலம் ரோடு | அ | | |
| | | 57 | 20 | என்.ஜி.ஓ. அலுலவக தெரு | அ | | |
| | | 58 | 20 | ஸ்ரீராம் தியேட்டத் பின்புறம் (வேளங்காநத்தம் ரோடு) | அ | | |
| | | 59 | 20 | மாரியாயி நகர் (வேளங்காநத்தம் ரோடு) | அ | | |
| | | 60 | 20 | திருச்சி ரோடு | அ | | |
| | | 61 | 20 | CM நகர் (வேளங்காநத்தம் ரோடு) | அ | | |
| | | 62 | 20 | லட்சுமி நகர் (வேளங்காநத்தம் ரோடு) | அ | | |
| | | 63 | 24 | ரத்தினா நகர் | அ | | |
| | | 64 | 24 | திருச்சி ரோடு, திருச்சி ரோடு விஸ்தரிப்பு (கிருஷ்ணன் நகர்) | அ | | |
| | | 65 | 24 | பெரியார் நகர் (வேளங்காநத்தம் ரோடு) | அ | | |

**<u>ஆ – மண்டலம்</u>**

| வ. எண் | வார்டு எண் | தெரு பெயர் | மண்டலம் |
|---|---|---|---|
| 1 | 1 | ஸ்ரீ நகர் | ஆ |
| 2 | 1 | முல்லை நகர் (ஆலமரத்துப்பட்டி விஸ்தரிப்பு) | ஆ |
| 3 | 1 | சுப்ரமணியபுரம் (மேலசந்தப்பாளையம் விஸ்தரிப்பு) | ஆ |
| 4 | 1 | முருகன் நகர் (மேலசந்தப்பாளையம் விஸ்தரிப்பு) | ஆ |
| 5 | 1 | சண்முகா நகர் (மேலசந்தப்பாளையம் விஸ்தரிப்பு) | ஆ |
| 6 | 2 | உடையார் தோட்டம் | ஆ |
| 7 | 2 | செங்குட்டை அண்ணா நகர் | ஆ |
| 8 | 4 | கலப்பு காலனி | ஆ |
| 9 | 4 | அம்பேத்கார் காலனி | ஆ |
| 10 | 5 | பணந்தோப்பு | ஆ |
| 11 | 6 | காமராஜர் காலனி | ஆ |
| 12 | 6 | திருமுருகன் நகர் 1 வது தெரு முதல் 4வது தெரு | ஆ |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 13 | 7 | மாணிக்க நகர் | ஆ | | |
| | | 14 | 7 | வலம்புரி நகர் | ஆ | | |
| | | 15 | 7 | முருகவிநாயகர் நகர் | ஆ | | |
| | | 16 | 8 | நடராஜ நகர் | ஆ | | |
| | | 17 | 8 | வீட்டு வசதி வாரிய குடியிருப்பு (மேல வடுகப்பட்டி வேளகாநத்தம் ரோடு வடக்கு ) | ஆ | | |
| | | 18 | 9 | லட்சுமி நகர் (மேலவடுகப்பட்டி) | ஆ | | |
| | | 19 | 9 | அழகுநாச்சியம்மன் நகர் | ஆ | | |
| | | 20 | 9 | கோல்டன் சிட்டி | ஆ | | |
| | | 21 | 9 | கோல்டன் சிட்டி விஸ்தரிப்பு | ஆ | | |
| | | 22 | 9 | செந்தூர் நகர் | ஆ | | |
| | | 23 | 9 | ஓம் சக்தி நகர் | ஆ | | |
| | | 24 | 10 | கணக்கப்பிள்ளை தோட்டம் | ஆ | | |
| | | 25 | 10 | அந்தரப்பட்டி ரோடு முதல் காமராஜர் தெரு | ஆ | | |
| | | 26 | 10 | வளநாடு தெரு | ஆ | | |
| | | 27 | 10 | பார்வதிபுரம் தெரு 9 (குறுக்கு தெரு 1, 2, 3, 4 மற்றும் 7) | ஆ | | |
| | | 28 | 11 | அண்ணாமலை நகர் (ஆலமரத்துப்பட்டி விஸ்தரிப்பு) | ஆ | | |
| | | 29 | 12 | பெரியார் தெரு | ஆ | | |
| | | 30 | 12 | கருமாரி அம்மன் கோவில் தெரு | ஆ | | |
| | | 31 | 13 | பார்வதிபுரம் 6வது தெரு | ஆ | | |
| | | 32 | 13 | பார்வதிபுரம் 7வது தெரு | ஆ | | |
| | | 33 | 13 | பார்வதிபுரம் 8வது தெரு | ஆ | | |
| | | 34 | 14 | காந்தி நகர் தெரு–1 | ஆ | | |
| | | 35 | 14 | காந்தி நகர் தெரு–2 | ஆ | | |
| | | 36 | 14 | காந்தி நகர் தெரு–3 | ஆ | | |
| | | 37 | 14 | காந்தி நகர் தெரு–4 | ஆ | | |
| | | 38 | 15 | பார்வதிபுரம் 3வது தெரு | ஆ | | |
| | | 39 | 15 | பார்வதிபுரம் 4வது தெரு | ஆ | | |
| | | 40 | 15 | பார்வதிபுரம் 5வது தெரு | ஆ | | |

| | | | |
|---|---|---|---|
| 41 | 16 | அங்காளம்மன் ஸ்டோர் | ஆ |
| 42 | 17 | அங்காளம்மன் கோவில் தெரு | ஆ |
| 43 | 17 | சுந்தர் நகர் | ஆ |
| 44 | 17 | தா.பேட்டை ரோடு மேற்கு | ஆ |
| 45 | 18 | சிவா நகர் | ஆ |
| 46 | 19 | பரிசல்துறை ரோடு | ஆ |
| 47 | 19 | காமாட்சி நகர் (சாலியர் தெரு விஸ்தரிப்பு) | ஆ |
| 48 | 20 | சிந்தாமணி தெரு, அய்யம்பாளையம் ஸ்டோர் | ஆ |
| 49 | 21 | ரவுத்து தெரு | ஆ |
| 50 | 21 | சஞ்சீவிராயன் கோவில் தெரு | ஆ |
| 51 | 21 | புதுத்தெரு | ஆ |
| 52 | 21 | பிள்ளையார் கோவில் மேல்புற கடைவீதி | ஆ |
| 53 | 21 | கடைவீதி | ஆ |
| 54 | 21 | சாராயக்கடை தெரு | ஆ |
| 55 | 21 | உப்பிலியர் தெரு | ஆ |
| 56 | 23 | பரிசல்துறை ரோடு | ஆ |
| 57 | 24 | கூடைமுறக்கார தெரு | ஆ |
| | | | |

**இ – மண்டலம்**

| வ. எண் | வார்டு எண் | தெரு பெயர் | மண்டலம் |
|---|---|---|---|
| 1 | 1 | குஞ்சநாயக்கன்ப்பாளையம் | இ |
| 2 | 1 | செட்டிதோட்டம் | இ |
| 3 | 1 | ஆலமரத்துப்பட்டி | இ |
| 4 | 2 | டி.வி.ஆர். தோட்டம் | இ |
| 5 | 9 | மேலவடுகப்பட்டி ( வேளங்காநத்தம் ரோடு வடக்கு முதல் சீவம்பட்டி ரோடு) | இ |
| 6 | 9 | கீழவடுகப்பட்டி | இ |

| | | | |
|---|---|---|---|
| 7 | 11 | கீழசந்தபாளையம் (குடித்தெரு, பள்ளர் தெரு) | இ |
| 8 | 11 | மேலசந்தபாளையம் | இ |
| 9 | 17 | பறையர் தெரு | இ |
| 10 | 17 | ஒட்டர் தெரு | இ |
| 11 | 18 | சாலியர் தெரு | இ |
| 12 | 19 | மேல தெரு | இ |
| 13 | 19 | சுண்ணாம்புகாரத் தெரு | இ |
| 14 | 19 | மாதா கோவில் தெரு | இ |
| 15 | 21 | நல்லமுத்துபிள்ளை தெரு | இ |
| 16 | 22 | தென்கள்ளர் தெரு | இ |
| 17 | 22 | வடகள்ளர் தெரு | இ |
| 18 | 22 | கார்கார்த்தார் தெரு | இ |
| 19 | 22 | பாலத்து மாரியம்மன் கோவில் தெரு | இ |
| 20 | 23 | அக்ரஹாரம் | இ |
| 21 | 23 | தெற்கு மடவாளர் தெரு | இ |
| 22 | 23 | வடக்கு மடவாளர் தெரு | இ |
| 23 | 23 | முதலியார் தெரு | இ |
| 24 | 23 | தட்டார தெரு | இ |
| 25 | 24 | புதுகள்ளர் தெரு | இ |
| 26 | 24 | பள்ளர் தெரு | இ |

அலுவலக குறிப்பு :

தீர்மானம் எண்.57, நாள்.24.07.2008ன்படி மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்ட தெருக்களின் மண்டல அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது. மேலும், புதிதாக அமைக்கப்பட்டுள்ள தெருக்களையும் மண்டல வாரியாக பட்டியலுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

அனுமதிக்கலாம் (ந.க.எண். 581/2022/அ)

ஒப்பம்/– சி. கலைச்செல்வி
நகர்மன்றத் தலைவர்
முசிறி நகர்மன்றம்

// உண்மை நகல் //

**ஆணையர்**
**முசிறி நகராட்சி**